**சுருக்கம்**

வணிகவரித்துறை — தமிழ்நாடு வணிகர் நல வாரியம் - உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெற்று வணிகம் செய்யும் சிறுவணிகர்களை வணிகர் நலவாரியத்தில் உறுப்பினராகச் சேர்த்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை**

அரசாணை (நிலை) எண். 69 நாள்: 29.06.2011.
திருவள்ளூர் ஆண்டு 2041
ஆனி 14,
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 725, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 25.09.1989.
2. அரசாணை (நிலை) எண்.43, வணிகவரி மற்றம் பதிவுத் (டி2) துறை, நாள் 28.02.2011.
3. அரசாணை (நிலை) எண்.44, வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள் 28.02.2010.
4. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் மனு, நாள் 31.05.2011.

-----

**ஆணை:-**

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 அல்லது தற்போது நடைமுறையில் இருக்கும் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம், 2006-ன் கீழ் பதிவு பெற்ற வணிகர்கள் மட்டுமே தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு வந்தனர். அண்மையில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நடைபாதை வணிகர்களைத் தவிர தொழில்வரி செலுத்தும் சிறுவணிகர்கள் அனைவரையும் வாரியத்தில் உறப்பினராகச் சேர்த்துக் கொள்ள அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வணிகர் நல வாரிய உறுப்பினர் இறந்தால் வாரியத்தால் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உதவித்தொகையை ரூ.50,000/—லிருந்து ரூ.1,00,000/—ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆணைகள், வாரிய உறுப்பினர்கள் அனைவரிடமிருந்தும் உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணமாக வருடந்தோறும் ரூ.100/— வசூல் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வெளியிடப்பட்டுள்ளன.

2. தற்போது, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட மனுவில் பல சிறுவணிகர்கள் தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றிருக்கமாட்டார்கள் என்றும், தொழில்வரி கூட செலுத்தியிருக்கமாட்டார்கள் என்றும், அவர்கள் தற்போதுள்ள ஆணைகளின்படி வணிகர் நலவாரியத்தில் உறுப்பினராகச் சேர முடியாது என்பதால் வாரியம் அளிக்கும் நலத்திட்டங்களை அவர்களால் அனுபவிக்க இயலாது என்றும், அரசிடம் முறையிட்டுள்ளது. மேலும்,

ஆண்டுதோறும் உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் செலுத்த வேண்டும் என்பது வணிகர்களுக்குத் தேவையில்லாத சிரமத்தைக் கொடுக்கும் என அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

3. வணிகர்களின் மேற்கண்ட கோரிக்கைகளை கவனமுடன் பரிசீலனை செய்தபின் அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது:-

(i) தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெறாமல், உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெற்று வணிகம் செய்யும், தொழில்வரி செலுத்தும் வரம்பில் வராத, சிறுவணிகர்களையும் வணிகர் நலவாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கலாம்.

(ii) மேலே இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆண்டுதோறும் ரூ.100/- உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் செலுத்த வேண்டும் என்று விதிக்கப்பட்ட நிபந்தனை திரும்பப் பெறப்படுகிறது. உறுப்பினராகச் சேரும் போது வணிகர்கள் ஆயுட்காலச் சந்தா தொகையாக ரூ.500/- செலுத்தினால் போதுமானது.

//ஆளுநரின் ஆணைப்படி //

சுனில் பாலிவால்
அரசுச் செயலாளர்.

பெறுநர்
வணிகவரி ஆணையர், சென்னை -5.
கூடுதல் ஆணையர் (வணிகவரி) / முதன்மைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு வணிகர் நலவாரியம், சென்னை -5.
நகல்:-
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதியமைச்சர் அலுவலகம், சென்னை-9.
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சென்னை-9.
இ.கோ/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.